# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 63/2007 | Date : 02.08.2023 | PW1 |
|---|---|---|
| Name: வீரராஜ் | S/o. **முத்துசாமி** | |
| Evidence Recorded Time: 03.31 P.M. to 04.10 P.M | | |

**இடை மனு எண்கள்.1/2023, 2/2023 அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பிரபாகரின் அப்பா பெயர் ஜெயராமன் என்றால் சரிதான். ஜெயராமனின் அப்பா பெயர் சென்னியப்ப கவுண்டர் என்றால் சரிதான். சொத்து சென்னியப்ப கவுண்டர் மூலம் ஜெயராமனுக்கு பாகம்மூலம் கிடைத்த சொத்து என்றால் சரிதான். ஜெயராமன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எந்தெந்த சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்கள்.291/4, 237/2 ஆகிய சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சா.சா.ஆ.1 ஆவணம் சர்வே எண்.237/2 க்குரியது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி ஆவணத்தில் ஜெயராமன் என்ற பெயர் சூழிக்கப்பட்டு TR.No.831/2003-04-6II நாள் 21.11.2003-ன் படி 1.ஜெ.உத்தரமணி, 2.ஜெ.பிரபாகரன் என்ற பெயர்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.5 ஆவணம் சர்வே எண்.291/4 க்குரியது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி ஆவணத்தில் ஜெயராமன் என்ற பெயர் சூழிக்கப்பட்டு TR.No.831/2003-04-6II நாள் 21.11.2003-ன் படி 1.ஜெ.உத்தரமணி, 2.ஜெ.பிரபாகரன் என்ற பெயர்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2003-ம் ஆண்டில் இருந்து உத்தரமணி மற்றும் பிரபாகரன் பெயர்களில்தான் சொத்திற்குண்டான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். ஜெயராமன் எந்த வருடம் இறந்தார் என்றால் நினைவில்லை. 2003-ம் ஆண்டிலிருந்து மேற்படி உத்தரமணி மற்றும் பிரபாகரன் பெயர்களில் சொத்து இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் பத்திரம் எழுதும் போது தெரியும். உத்தரமணி மற்றும் பிரபாகரன் அவர்களுக்கிடைய பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் அனைத்து வாரிசுகளையும் உட்படுத்தி என்று கடைசி வரியில் குறிப்பிடப்பட்டுள்ளது போல இந்த வழக்கை அனைத்து வாரிசுதார்களையும் சேர்த்து

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், பிரபாகர் பெயரில் மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றாலும் சரிதான். வழக்கு ஆரம்பத்தில் பிரபாகரன் பெயரில்தான் தாக்கல் செய்தேன், அவர் இறந்த பிறகுதான் உத்தரமணி, கவிதா, மனோஜ்குமார் ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் இரண்டாவது பக்கத்தில் ஆறாவது வரியில் 2ம் லக்கமிட்டவர் பெயரில் டெபாசிட் செய்து கிரயமும், சுவாதீனமும் செய்து கொள்வதோடு அதனால் 1 லக்கமிட்டவருக்கு ஏற்படும் இழப்புகளையும் 2 லக்கமிட்வரிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுவாதீனம் என்னிடம் ஒப்படைத்திருந்தால் மேற்படி வாசகம் ஒப்பந்த பத்திரத்தில் எழுதவேண்டிய அவசியம் ஏற்படாது என்றாலும் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட அன்றே சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது, அன்றிலிருந்து இன்று வரை நான்தான் விவசாயம் செய்து வருகிறேன். நான் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வருவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வருவாய் துறை ஆவணங்கள் பிரபாகரன், உத்தரமணி பெயர்களில் இருந்து அவர்கள் இறந்த பின்னிட்டு கவிதா, மனோஜ்குமார் பெயர்களில்தான் இன்று வரை இருந்து வருகிறது என்றால் சரிதான், கிரையம் செய்து கொடுக்கவில்லை அதனால் அவர்கள் பெயர்களில் உள்ளது. சா.சா.ஆ.4 மற்றும் சா.சா.ஆ.7 அடங்கலில் நான்தான் சொத்தை அனுபவித்து வருவதற்கான குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. சுவாதீனத்தை நான் பெற்றிருந்தால் அதனை பதிவு சட்டம் பிரிவு 17(1)(A) படி கட்டாயம் பதிவு செய்திருக்கவேண்டும் என்றால் அப்போது பதிவு தேவை இல்லை என்று சொன்னார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தின் கடைசி பக்கத்தில் இரண்டாவது கைரேகை வைக்கப்பட்டுள்ள இடத்தில் யாருடைய ரேகை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அது பிரபாகரனின் ரேகை தான். மேற்படி ரேகையும், அதில் உள்ள கையெழுத்தும் பிரபாகரனின் கையெழுத்து மற்றும் ரேகை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் மைனர் மகன் சுமார் 12 வயதுள்ள மனோஜ்குமார் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் பிரபாகரன் தனக்காவும் மனோஜ்குமாரின் பாதுகாவலர் என்ற முறையில் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்தின் மூன்றாவது பக்கத்தில்

என்னுடைய கையொப்பமோ, பிரபாகரனின் கையொப்பம் மற்றும் கைரேகை இல்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த பத்திரம் போடப்பட்ட சமயம் பிரபாகரன் வேலை செய்து வந்தார் என்பதை காட்டுவதற்கு பி.வா.சா.ஆ.34, பி.வா.சா.ஆ.35 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவர் அன்றைய தினம் லேட்டாக வந்தார். பிரபாகரன் அன்றைய தினம் காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை வேலை செய்து வந்துள்ளார் என்பதை காட்டுவதற்கு அவருடைய வருகை பதிவு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். சொத்து பாகம் பிரிக்கப்படாத நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரபாகரன் மட்டும் கையொப்பம் போடமுடியாது என்று சொன்னால், மூன்று மாதத்திற்குள் கிரையம் செய்து கொடுப்பதாக சொன்னதால் கையெழுத்து வாங்கவில்லை. கிரைய ஒப்பந்தம் எழுதும் போது உத்தரமணி உடன் இருந்ததாக இதற்கு முன்பு நான் சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்பது சரியா தவறா என்றால் அது உண்மைதான், உத்தரமணி எனக்கு உறவினர் என்றால் எனக்கு சித்தி ஆவார். சொத்திற்கு இரண்டு உரிமையாளர்கள் இருக்கும் போது ஒருவர் மட்டும் கிரையம் எழுதிக்கொடுத்தால் அது செல்லுமா, செல்லாதா என்றால் அது செல்லாது. பிரபாகரனிடம் நான் அவருடைய பங்கிற்கு கிரைய ஒப்பந்தம் போடவில்லை என்றாலும் முழு சொத்திற்கும் சேர்த்துதான் கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்றாலும் சரிதான். உத்தரமணியும் சொத்தின் உரிமையாளராக இருக்கும் பட்சத்தில் பிரபாகரன் மட்டுமே எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கூட்டுரிமையாளர் உத்தரமணியை அது கட்டுப்படுத்தாது என்றாலும் வா.சா.ஆ.1 ஆவணமே செல்லாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் எனக்கு எந்த விதமான பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றாலும், பிரபாகரனின் கையொப்பம் அதில் இல்லை என்பதால் வழக்கு முழுமைக்கும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. அதில் உள்ள கையொப்பமும், கைரேகையும் பிரபாகரனுடையதுதான். சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்படாத நிலையில் வழக்கு பரிகாரம் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரபாகரன் உயிருடன் இருந்த காலம் வரை பிரபாகரனின் கையெழுத்து அவருடையதுதான் என்பதை நிரூபிக்க மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை. வா.சா.ஆ.1

மோசடியான ஆவணம் என்பதாலும், அதன் மூலம் எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றாலும், வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.